இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 20-05-2025

மாநிலப் பட்டியலில் கல்வி!

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய, 'தேசியக் கல்விக் கொள்கை - 2020 எனும் மதயானை' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி அவர்களும் மிகமிக முக்கியமான கோரிக்கை ஒன்றை வைத்துள்ளார்கள். 'கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுங்கள்' என்பதுதான் அந்தக் கோரிக்கை. இரண்டு ஆண்டுகளுக்கு முன் பிரதமர் மோடி அவர்கள் முன்னிலையில் பேசும் போது முதலமைச்சர் அவர்கள் இதே கருத்தை வலியுறுத்தினார்கள்.

அரசமைப்புச் சட்டம் எழுதப்பட்டபோது கல்வியானது, மாநிலப்பட்டியலில்தான் இருந்தது. 1975 ஆம் ஆண்டு இந்தியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்ட போது கல்வியானது பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. 42 ஆவது சட்டத்திருத்தம் மூலமாக இது செய்யப்பட்டது. 1976 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 246, ஏழாவது அட்டவணையில் பட்டியல் இரண்டில் இருந்தது. கல்வி குறித்து அனைத்து முடிவுகளை எடுக்கும் அதிகாரமும் மாநில அரசுகளின் கையில் இருந்தது. இப்போது கல்வி, பொதுப்பட்டியல் வரிசை 25 இல் இருக்கிறது.

"நாட்டில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது, கல்வியை மாநில பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றி நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசன திருத்தத்தை ரத்து செய்ய வேண்டும்" என்று கோரி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் அவர்கள் 'அறம் செய்ய விரும்பு' அமைப்பின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கைத் தாக்கல் செய்தார். நீதிபதிகள் மகாதேவன், சுந்தர் மற்றும் செந்தில்குமார் ராமமூர்த்தி அடங்கிய முழு அமர்வில் இந்த வழக்கு விசாரணை நடத்தியது. இன்னமும் அந்த வழக்கு விசாரணையில்தான் இருக்கிறது.

மாநிலக் கல்விக் கொள்கையை வகுக்க நீதிபதி டி.முருகேசன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இக்குழு தனது அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது. அக்குழு தனது முதல் பரிந்துரையாக, 'கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்' என்று கூறி இருக்கிறது.

இன்றைய பா.ஜ.க. அரசானது, கல்வித் துறை முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் பட்டியலில் இருப்பதைப் போலவே செயல்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் பட்டியலில் கல்வி இருப்பதைப் போலச் செயல்படும் அவர்கள், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்கிறார்களா என்றால் அது இல்லை. தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறைக்கு இந்த ஆண்டு ரூ.40 ஆயிரம் கோடி செலவு செய்கிறது. ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு, ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் செலவு செய்யும் தொகை ரூ.70 ஆயிரம் கோடி தான். நிதி ஒதுக்கீடு செய்யாமலேயே கல்வித் துறையை ஆக்கிரமித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

2022 ஆம் ஆண்டு ஒன்றிய கல்வி அமைச்சகத்தால் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. 'கல்விக்கான நிதி நிலை செலவின பகுப்பாய்வு' என்று இதற்குப் பெயர். இந்தியாவில் கல்வித் துறைகளின் மொத்த வருவாய் செலவு ரூ.6.25 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டது. இதில் ஒன்றிய அரசால் செலவு செய்யப்படும் தொகை 15 விழுக்காடு மட்டுமே. 85 விழுக்காடு தொகையை மாநில அரசுகளே செலவு செய்கின்றன என்று அந்த அறிக்கை சொல்கிறது. 85 விழுக்காடு தொகையை செலவு செய்யும் மாநில அரசுகளால், கல்விக் கொள்கையை தீர்மானிக்க முடியாது என்பது அவமானம் அல்லவா?

அனைத்துச் செலவுகளையும் செய்வது மாநில அரசு. ஆனால் பாடத்திட்டத்தை மட்டும் அவர்களது பாடத் திட்டமாக வைத்திருக்க வேண்டுமாம். மருத்துவக் கல்லூரியை கோடிக்கணக்கில் செலவு செய்து நடத்துவது மாநில அரசு. ஆனால் மாணவர் சேர்க்கையை 'நீட்' தேர்வு மூலமாக நடத்துவது ஒன்றிய அரசு. இதைப் போல எதேச்சதிகாரப் புத்தி இருக்க முடியுமா?

அனைவருக்கும் கட்டாயக் கல்வி, அனைவருக்கும் அடிப்படைக் கல்வி, அனைவருக்கும் குறைந்த பட்சக் கல்வித் தகுதி - இதுதான் பள்ளிக் கல்வியின் அடிப்படை ஆகும். பள்ளிக் கல்வியின் இந்த முகத்தை, அடிப்படையைச் சிதைக்கவே, 'தேசியக் கல்விக் கொள்கை' கொண்டு வரப்படுகிறது. தேசியக் கல்விக் கொள்கை, நீட் தேர்வு ஆகியவைதான், 'மாநிலப் பட்டியலில் கல்வி' என்ற முழக்கத்துக்கு முக்கிய அடிப்படையாக உள்ளது.

ஒன்றிய அரசாங்கம் 'ஒரே மாதிரி பாடத்திட்டத்தில்' தான் கவனம் செலுத்துகிறது. இங்கே தேவையானது, தனித்தனி கவனிப்புகளும், அக்கறைகளும் தேவை. ஒரு பி.எம்.ஸ்ரீ. பள்ளியை கட்டுவது முக்கியமல்ல. அதில் படிக்கும் பிள்ளைகளுக்கு எந்த அடிப்படையில் கல்வி கற்பிக்கப்படப் போகிறது என்பதுதான் முக்கியம். உயர் தரமான கட்டடத்தை விட, கற்பிப்பு அக்கறையே அவசியம்.

பள்ளிப் படிப்பை முடித்து உயர் கல்வி செல்பவர்களின் எண்ணிக்கை தேசிய அளவில் 27.1 சதவிகிதமாக உள்ளது. ஆனால் தமிழகத்தில் உயர் கல்விக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை 51.4 சதவிகிதம் ஆகும். அதாவது இந்திய சராசரியை விட தமிழகத்தின் சராசரி இரண்டு மடங்கு ஆகும். தேசிய தரவரிசைப் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த 14 பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன. முதல் 100 இடங்களுக்குள் தமிழகத்தைச் சேர்ந்த 33 கல்லூரிகள் இடம் பெற்றுள்ளன. இதே போன்ற உயர்நிலையில் பல மாநிலங்கள் இல்லை. எனவே, அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ற கவனிப்புகள் தான் தேவை.

கல்வி அறிவில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக கேரளா இருக்கிறது. 96.2 விழுக்காடு பெற்றுள்ளது கேரளா. மிகக் குறைவான கல்வி அறிவு கொண்ட மாநிலமாக பீகார் இருக்கிறது. இது 61.8 விழுக்காடு மட்டுமே. இரண்டு மாநிலக் கல்வியையும் ஒரே மாதிரியாக நடத்த முடியுமா?

'நெருக்கடி நிலை காலம் இந்தியாவின் இருண்ட காலம்' என்று சொல்கிறார் பிரதமர் மோடி. இருண்ட காலத்தில் எடுக்கப்பட்ட முடிவை எதற்காக அவர் பின்பற்ற வேண்டும். 'இருண்ட காலம்' என்பது அரசியலுக்காக சொல்லப்படும் கருத்தல்ல என்று மெய்ப்பிக்கும் வகையில், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற பிரதமர் மோடி முடிவேடுக்க வேண்டும்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் 18-5-2025 அன்று பல்லாவரம் அருள் முருகன் திருமண மண்டபத்தில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள். கழகத் தீர்மான குழு செயலாளர் மீ.அ. வைத்தியலிங்கம், மாநகரச் செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மண்டல தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் த.ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, அ.தமிழ் மாறன், மூ.ரஞ்சன், இரா.பொன்ராம், எல். பிரபு, கோ. ஜானகிராமன், ரவிச்சந்திரன், பி.கே.ஏ.சத்திய பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

மசோதாக்கள் மீது ஆளுநர், குடியரசுத் தலைவர் முடிவெடுக்க கெடு விதித்தது சரியானதே!

உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றம் விசாரணை நடத்தத் துடிப்பதன் பின்னணி என்ன?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி!

சென்னை, மே 20

மசோதாக்கள் மீது ஆளுநர், குடியரசுத் தலைவர் முடிவெடுக்க உச்சநீதிமன்றம் கெடு விதித்தது அரசமைப்புச் சட்டம் 142-இன்படி மிகச் சரியானதே என்றும், புதிய சட்டம் செய்யவில்லை - இருப்பதைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட தீர்ப்பு இது என்றும் இந்தத் தீர்ப்பை முறியடிக்கும் வகையில் ஒன்றிய அரசு முயற்சிக்கலாமா? என்றும், உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்ற அமர்வு விசாரணை நடத்த துடிப்பதன் பின்னணி என்ன? என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

குடியரசுத் தலைவரோ, ஆளுநரோ அரசமைப்புச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களோ, மேலானவர்களோ அல்ல! இது போன்ற ஒரு செயல், சென்னை உயர்நீதிமன்றத்தில் விடுமுறைக்காலத்தில் அமைந்துள்ள நான்கு அமர்வுகளில் ஓர் அமர்வில் ஜஸ்டில் ஜி.ஆச்சாமி நாதன், ஸ்டிஸ் லட்சுமி நாராயணன் அமர்வு அந்தக் குறிப்பிட்ட அமர்வு - துணைவேந்தர்கள் நியமன உரிமை தமிழ்நாடு அரசுக்கு வழங்கும் சட்டத்தை உறுதி செய்து அரசமைப்புச் சட்டம் 142இன்படி உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய சட்டத்தை எதிர்த்து ஒரு வழக்கு பட்டியலிடப்பட்டு, அதை அவசர வழக்காக விடுமுறை காலத்தின் அமர்வு ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சாமிநாதன் தலைமை

யில் எடுத்து விசாரிப்பதுடன், தமிழ்நாடு அரசு ஒரு வாரத்திற்குள் பதில் மனு (COUNTER) போட வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது போல கூறுவது எந்த நோக்கத்தோடு என்ற கேள்வி எழத்தானே செய்கிறது?

நீதிமன்ற விடுமுறை காலத்தில் வழக்கு!

இந்த வழக்கை இந்த அமர்வு விரைவுபடுத்த அதற்கென்ன அவசியம்? அதுவும் நீதிமன்ற விடுமுறை காலத்தில்! உச்சநீதிமன்றத் தீர்ப்பை, உயர்நீதிமன்ற அமர்வு தவறு என்று சட்டப்படி கூற முடியுமா?

இரண்டு வாரத்திற்குள் ஏதாவது தடையாணை போன்று வழங்கலாமா என்று கருதும் திட்டமோ என்ற நியாயமான சந்தேகம் எழவே செய்கிறது!

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்ற அமர்வு அதுவும் விடுமுறைக் கால அமர்வு இப்படி விசாரித்து, ஏதாவது அவசர ஆணை பிறப்பிக்கத் துடிப்பது சட்டப்படி செல்லுமா? என்பதும் கேள்விக் குறி.

குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்திடம் ஆலோசனை கேட்டு 14 கேள்விகளை முன்வைத்துள்ள நிலையில், அதே பிரச்சினையை பயன்படுத்தி உள்ள ஒரு வழக்கின் விசாரணைக்கு இப்போது உயர்நீதிமன்றம் மிகுந்த அவசரம் காட்டுவது, சட்டப்படியும், நியாயப்படியும் உகந்ததா?

பூனைக்குட்டி வெளியே வரும்!

தமது உயர்நீதிமன்றத் தீர்ப்புகள்பற்றி பொதுவெளியில் விமர்சிக்கப்பட்ட ஒருவர், இப்படி விசாரணைக்கு நிர்ப்பந்தப்படுத்தி, "ஒரு வாரத்திற்குள்" என்று தமிழ்நாடு அரசுக்கு கெடு வைத்ததன் நோக்கம் என்ன?

இவற்றையெல்லாம் மக்கள் மன்றத்தில், நடுநிலையாளர்களும், ஜனதாயக, அரசமைப்புச் சட்டப் பாதுகாவலர்களும் கூர்ந்து கவனித்தே வருகின்றனர். விரைவில் 'பூனைக்குட்டி' மெல்ல மெல்ல வெளியே வரும் என்பது உறுதி!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வேலை வாய்ப்புக்கான தொழிலாளர் மேலாண்மையில்

பட்ட - பட்ட மேற்படிப்பு மற்றும் முதுநிலை பட்டயப் படிப்புகளில் சேர விண்ணப்பங்கள்!

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் அறிவிப்பு!

சென்னை, மே 20

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் 2025--2026ம் ஆண்டிற்கான பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்ட படிப்பு, எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்ட மேற்படிப்பு மற்றும் பிஜி.டி.எல்.ஏ (தொழிலாளர் நிர்வாகத்தில் முதுநிலை மாலை நேர பட்டயப்படிப்பு), தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் (வாரஇறுதி) பட்டய படிப்புகளும் நடத்தப்பட்டுவருகின்றன. பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), எம்.ஏ. (தொழிலாளர்மேலாண்மை) படிப்புகள் சென்னை பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பிஜி.டி.எல்.ஏ. மற்றும் டி.எல்.எல் (ஏ.எல்.) படிப்புகள் தமிழக அரசின் அங்கீகாரத்துடன் நடைபெற்று வருகின்றது.

பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை, எம்.ஏ (தொழிலாளர் மேலாண்மை), பிஜி.டி.எல்.ஏ. மற்றும் டி.எல்.எல் (ஏ.எல்.) ஆகியபட்ட / பட்டமேற்படிப்பு / பட்டய படிப்புகள் இக்கல்வி நிலையத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் மனிதவள மேம்பாட்டு மேலாளராக பணிபுரிந்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

+2 முடித்த விருப்பமுள்ள மாணவர்கள் பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), இளநிலை பட்டம் பெற்ற மாணவர்கள் எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) முதுநிலை பட்ட மற்றும் பட்டய படிப்புகளுக்கும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பவர்கள் மதிப்பெண் அடிப்படையில் அரசு விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தங்கும் விடுதி வசதி இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் ஆண் மாணவர்களுக்கு மட்டும்.

விண்ணப்பங்கள் 21.04.2025 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்ட மேற்படிப்பு, பிஜி.டி.எல்.ஏ. மற்றும் டி.எல்.எல் (ஏ.எல்.) ஆகிய பட்ட, பட்டய படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் வழங்க இறுதி தேதி சென்னை பல்கலைக்கழக இளநிலை பட்ட படிப்பு தேர்வு முடிவுகள் வெளியாகும் வரை.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் - 21.05.2025

விண்ணப்ப கட்டணம் - ரூ.200/-.

FOR SC/ST - ரூ.100/-

(சாதிச் சான்றிதழ் நகல் தாக்கல் செய்ய வேண்டும்)

விண்ணப்பங்களை தபாலில் பெற, விண்ணப்ப கட்டணத்திற்கான ரூ.200/-(SC/ST - ரூ. 100/-) மற்றும் தபால் கட்டணம் ரூ.50/-க்கான வங்கி வரைவோலையினை "THE DIRECTOR, TAMILNADU INSTITUTE OF LABOUR STUDIES, CHENNAI" என்ற பெயரில் எடுத்து பதிவுத்தபால் / விரைவுஅஞ்சல் / கொரியர் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மதிப்பெண் மற்றும் அரசு விதிகளின் அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மேலும் விவரங்களுக்கு : ஒருங்கிணைப்பாளர்கள் (சேர்க்கை) முனைவர் இரா.ரமேஷ்குமார், இணைபேராசிரியர் / HOF MOBILE NO. 9884159410

முனைவர் ச. கார்த்திகேயன், உதவி பேராசிரியர் - MOBILE NO. 9965899822

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், மின்வாரியசாலை, மங்களபுரம் (அரசு ஐ.டி.ஐ பின்புறம்), அம்பத்தூர், சென்னை - 600 098.

தொலைபேசி எண். 044 - 29567885 / 29567886.

EMAIL: TILSCHENNAI@TN.GOV.IN

வல்லம் ஒன்றியம் - கொங்கரப்பட்டு கிராமத்திலிருந்து மணியம்பட்டு கிராமத்துக்குச் செல்வதற்கு

சங்கராபரணி ஆற்றில் புதிய உயர்மட்ட மேம்பாலம்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

செஞ்சி, மே 20 -

வல்லம் ஒன்றியம் கொங்கரப்பட்டு கிராமத்திலிருந்து மணியம்பட்டு கிராமத்துக்கு செல்வதற்கு சங்கராபரணி ஆற்றில் ரூ.9.10 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட மேம்பாலம் அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி வல்லம் ஒன்றியம் கொங்கரப்பட்டு கிராமத்திலிருந்து மணியம்பட்டு கிராமத்திற்கு சங்கராபரணி ஆற்றைக் கடந்து அப்பகுதி பொதுமக்கள் சென்று கொண்டிருந்தனர்.

மழைக்காலங் களில் சங்கராபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் இக்கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனால் சங்கராபரணி ஆற்றில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் பணி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார். மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் காசிம்மாள் முனுசாமி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர், செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, ஒன்றியச் செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, அன்புராஜ், முருகானந்தம், ராமதாஸ், சசிகலா மோகனசுந்தரம், பிரேம் சாந்தி, முருகன், லட்சுமி லட்சுமணன், சரண்யா நாகசாமி, ஏழுமலை, பழனி, கலை சிவசங்கரன், கதிரவன், மண்ணாங்கட்டி, முருகேசன், பாண்டியராஜன், ரவிச்சந்திரன், பன்னீர்செல்வம், ஜானகிராமன், மனோகரன், சுப்பிரமணி, குணசேகரன், பிரகாஷ், சரவணன், முத்து, கிருஷ்ணன், நாராயணன், மணிமாறன், நித்தியானந்தன், சங்கர், மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.